Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

TNPSC
CJ (P)

Previous Year Paper
19 Aug, 2023

Teachingninja.in

வினாத்தொகுப்பு எண் :

CJP245

பதிவு எண்

2023

பட்டப்படிப்புத் தரம்

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : **100**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் உள்ளனவா என்பதையும் சரி பார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை. **ஒவ்வொரு தவறான விடைக்கும் 0.10 மதிப்பெண் வீதம் கழிக்கப்படும்.**
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதலாம் பக்கத்தில் பகுதி-II பிரிவு-II ல் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்** குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாக குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு குமிழிகள் (A), (B), (C) மற்றும் (D) கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட நான்கு குமிழிகளில் ஏதேனும் ஒன்று மட்டும் நிரப்பப்பட வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட விடைகள் சரியாக இருப்பதாக கருதினால், மிகவும் பொருத்தமான ஒன்றை மட்டும் நிரப்பவும். இந்நேர்வுகளில், இறுதியான விடைகள் மட்டுமே சரியானதாக கருதப்படும்.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ Ⓑ Ⓒ மற்றும் Ⓓ என நான்கு குமிழிகள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக் கருதும் விடையை ஒரே ஒரு குமிழியில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். ஒரு குறிப்பிட்ட கேள்விக்கு நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக்காட்டவேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அந்த விடை தவறானதாகக் கருதப்படும் மற்றும் 0.10 மதிப்பெண்கள் கழிக்கப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத்தொகுப்பினை மட்டுமே தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவிதக் குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்ட குறிப்புகளே முடிவானவை.
13. நீங்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் ஒன்றில் பகுதி-II பிரிவு-III ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவேண்டும். இதற்கென கூடுதல் ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
14. வினாத்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தின் பெயர், இடம், கட்சிக்காரர்களின் பெயர் உள்ளிட்ட தகவல்கள் கற்பனையானவை. அவை உண்மையானவையாகவோ, சட்டரீதியாக சரியானவையாகவோ இல்லாமல் இருக்கலாம். இருப்பினும், நீங்கள் வேறு வகையில் விளக்கம் கொள்ளாமல் விடையளிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே அதனை கருத வேண்டும்.
15. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே நீங்கள் பதிலளிக்க வேண்டும். நீங்கள் கூடுதல் தகவல்களை யூகிக்கவோ, அனுமானிக்கவோ கூடாது.
16. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கை / தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

Teachingninja.in

SPACE FOR ROUGH WORK

Teachingninja.in

1. Right to an office is?

(A) A Civil Right

(B) A Contractual Right

(C) A Fundamental Right

(D) A Constitutional Right

ஒரு பதவிக்கான உரிமை

(A) ஒரு சிவில் உரிமை

(B) ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான உரிமை

(C) ஒரு அடிப்படை உரிமை

(D) அரசியலமைப்பு உரிமை

2. All suits are to be instituted in the?

(A) High Court

(B) Principal Civil Court of original jurisdiction

(C) Court of lowest grade competent to by it

(D) Revenue Court

அனைத்து வழக்குகளும் எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும்?

(A) அந்த மாநில உயர்நீதிமன்றம்

(B) அசல் அதிகார வரம்பு உடைய முதன்மை சிவில் நீதிமன்றம்

(C) அதற்கு தகுதியான குறைந்த தர நீதிமன்றம்

(D) வருவாய் நீதிமன்றம்

Teachingninja.in

3. What is the remedy of a third party who is dispossessed in execution of a decree?

(A) To sue for possession

(B) To apply to the executing court

(C) To seek remedy from the Appellate Court

(D) None of the above

ஒரு ஆணையை நிறைவேற்றுவதில் மூன்றாம் தரப்பினர் வெளியேற்றப்பட்டால் அவருக்கு என்ன பரிகாரம் உள்ளது?

(A) உடைமைக்காக வழக்கு தொடுக்க

(B) நிறைவேற்றும் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க

(C) மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட

(D) மேலே எதுவும் இல்லை

4. What is the duty of the Court if there is no one willing to be the Guardian of the Minor defendant in a suit?

(A) It can proceed exparte

(B) It has to dismiss the suit

(C) It has to appoint its officer to be Guardian

(D) None of the above

ஒரு வழக்கில் மைனர் பிரதிவாதியின் பாதுகாவலராக இருக்க யாரும் தயாராக இல்லை என்றால் நீதிமன்றத்தின் கடமை என்ன?

(A) தோன்றா தரப்பினராக தொடரலாம்

(B) வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்

(C) அதன் அதிகாரியை பாதுகாவலராக நியமிக்க வேண்டும்

(D) மேலே எதுவும் இல்லை

Teachingninja.in

5. A gift of immovable property effected by a deed of gift but brought about by undue influence of the donee, though the donor acted voluntarily in making it:

(A) Is valid and binding

(B) Is void

(C) Is voidable at the donee's option

(D) Is voidable at the donor's option

நன்கொடையாளர் தானாக முன்வந்து செயல்பட்டாலும், நியாயமற்ற ஆதிக்கத்தின் மூலம் பெறப்பட்ட நன்கொடை பத்திரம்

(A) செல்லுபடியாகும் & கட்டுப்படுத்தும்

(B) செல்லாது

(C) நன்கொடை பெற்றவரின் விருப்பப்படி செல்லாதது என விளம்பபடலாம்

(D) நன்கொடையாளரின் விருப்பப்படி செல்லாதது என விளம்பபடலாம்

6. Under the provisions of the Transfer of Property Act, 1882, an easement cannot be transferred apart from the dominant heritage:

(A) the statement is true

(B) the statement is false

(C) the statement is partly true

(D) none of the above

சொத்து பரிமாற்றச் சட்டம், 1882 இன் விதிகளின் கீழ், வசதியுரிமை எந்த அசையா சொத்திற்கு உள்ளதோ அந்த சொத்துடன் சேர்த்துதான் விற்கப்பட முடியும்

(A) கூற்று உண்மை

(B) கூற்று தவறானது

(C) கூற்று ஓரளவு உண்மை

(D) மேலே எதுவும் இல்லை

Teachingninja.in

7. Fraudulent transfer is dealt with under:

(A) section 49 of the Transfer of Property Act, 1882

(B) section 50 of the Transfer of Property Act, 1882

(C) section 51 of the Transfer of Property Act, 1882

(D) section 53 of the Transfer of Property Act, 1882

மோசடியான சொத்து மாற்றம் இதில் கையாளப்படுகிறது

(A) சொத்து பரிமாற்றச் சட்டம், 1882 இன் பிரிவு 49

(B) சொத்து பரிமாற்றச் சட்டம், 1882 இன் பிரிவு 50

(C) சொத்து பரிமாற்றச் சட்டம், 1882 இன் பிரிவு 51

(D) சொத்து பரிமாற்றச் சட்டம், 1882 இன் பிரிவு 53

8. Every transfer of immovable property made with intent to defeat or delay the creditors of the transferor, shall be voidable:

(A) at the option of creditor so defeated or delayed

(B) at the option of debtor

(C) at the option of court

(D) none of the above

பரிமாற்றுபவரின் கடன் கொடுத்தவர்களை தோற்கடிக்கும் அல்லது தாமதப்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்ட அசையாச் சொத்தின் ஒவ்வொரு பரிமாற்றமும்

(A) கடன் கொடுத்தவரின் விருப்பப்படி இல்லா நிலையாக்கப்படக்கூடியது

(B) கடனாளியின் விருப்பப்படி இல்லா நிலையாக்கப்படக்கூடியது

(C) நீதிமன்றத்தின் விருப்பத்தின் பேரில் இல்லா நிலையாக்கப்படக்கூடியது

(D) மேலே எதுவும் இல்லை

Teachingninja.in

9. How the preventive relief is granted under the Specific Relief Act, 1963 by the court?

(A) At the discretion of the court by injunction perpetual

(B) At the discretion of the court by injunction temporary

(C) Both (A) and (B) are correct

(D) None of the above

நீதிமன்றத்தால் குறித்த வகை பரிகார சட்டம், 1963 ன் கீழ் தடுப்பு நிவாரணம் எவ்வாறு வழங்கப்படுகிறது?

(A) நிரந்தரமான தடை உத்தரவு மூலம் நீதிமன்றத்தின் விருப்பப்படி

(B) தற்காலிக தடை உத்தரவு மூலம் நீதிமன்றத்தின் விருப்பப்படி

(C) (A) மற்றும் (B) இரண்டும் சரி

(D) மேலே எதுவும் இல்லை

10. What recourse is available to a person if he is dispossessed, without his consent, of immovable property otherwise than in due course of law:

(A) He may, by criminal suit, recover possession thereof

(B) He or any person through whom he has been in possession or any person claiming through him may, by a civil suit, recover possession thereof

(C) He may, by mortgage suit, recover possession thereof

(D) He may, by money suit, recover possession thereof

சட்டப்படி அல்லாமல், அசையாச் சொத்தை ஒருவரது அனுமதியின்றி அபகரித்தால், அவருக்கு எத்தகைய பரிகாரம் உள்ளது:

(A) கிரிமினல் வழக்கு மூலம் அதன் உடைமையை மீட்டெடுக்கலாம்

(B) அவர் அல்லது அவர் மூலம் உடைமையில் உள்ள எந்தவொரு நபரும் அல்லது அவர் மூலம் உரிமை கோரும் எந்தவொரு நபரும், உரிமை இயல் வழக்கு மூலம், அதன் உடைமையை மீட்டெடுக்கலாம்

(C) அவர், அடமான வழக்கு மூலம், அதன் உடைமையை மீட்டெடுக்கலாம்

(D) அவர், பண மீட்பு வழக்கு மூலம், அதன் உடைமையை மீட்டெடுக்கலாம்

Teachingninja.in

11. The following contracts cannot be specifically enforced, namely:-

(A) A contract, the performance of which involves the performance of a continuous duty which the court cannot supervise

(B) A contract, the performance of which involves the performance of an occasional duty which the court cannot supervise

(C) A contract, the performance of which involves the performance of a periodic duty which the court cannot supervise

(D) None of the above

பின்வரும் ஒப்பந்தங்களை குறிப்பாக செயல்படுத்த முடியாது, அதாவது:-

(A) ஒரு ஒப்பந்தம், நீதிமன்றம் மேற்பார்வை செய்ய முடியாத ஒரு தொடர்ச்சியான கடமையை நிறைவேற்றுவதை உள்ளடக்கியது

(B) ஒரு ஒப்பந்தம், நீதிமன்றம் மேற்பார்வை செய்ய முடியாத அவ்வப்போது ஏற்படும் கடமையை நிறைவேற்றுவதை உள்ளடக்கியது

(C) ஒரு ஒப்பந்தம், நீதிமன்றம் மேற்பார்வை செய்ய முடியாத ஒரு குறிப்பிட்ட கால கடமையை நிறைவேற்றுவதை உள்ளடக்கியது

(D) மேலே எதுவும் இல்லை

12. Whether any appeal is allowed against the order or decree passed in any suit instituted under section 6 of the Specific Relief act, 1963:

(A) Yes, appeal is allowed

(B) No appeal shall lie from any order or decree passed in any suit instituted under this section

(C) Appeal can be allowed, if permitted by the court, which gave the order or decree

(D) None of the above

குறித்த வகை பரிகார சட்டம், 1963 இன் பிரிவு 6 இன் கீழ் நிறுவப்பட்ட எந்த ஒரு வழக்கிலும் நிறைவேற்றப்பட்ட உத்தரவு அல்லது ஆணைக்கு எதிராக ஏதேனும் மேல்முறையீடு அனுமதிக்கப்படுமா:

(A) ஆம், மேல் முறையீடு அனுமதிக்கப்படுகிறது

(B) இல்லை. மேல்முறையீடு கிடையாது

(C) உத்தரவு அல்லது ஆணையை வழங்கிய நீதிமன்றம் அனுமதித்தால், மேல்முறையீடு அனுமதிக்கப்படலாம்

(D) மேலே எதுவும் இல்லை

Teachingninja.in

13. When can a Court direct rescission of a contract?

(A) Where the contract is voidable or terminable by the plaintiff

(B) Where plaintiff becomes incapable of performing it

(C) Where the contract is illegal at its inception

(D) None of the above

ஒரு ஒப்பந்தத்தை நீதிமன்றம் எப்போது ரத்து செய்யலாம்?

(A) வாதியின் விருப்பத்திற்கு இணங்க ஒரு ஒப்பந்தம் செல்லாததாகவோ அல்லது ரத்து செய்யப்படக்கூடியதாகவோ இருந்தால்

(B) வாதியால் அதைச் செய்ய இயலாமல் இருந்தால்

(C) ஒப்பந்தம் அதன் தொடக்கத்தில் இருந்தே சட்டவிரோதமானது என்றால்

(D) மேலே எதுவும் இல்லை

14. Which is not an example of "Promissory Note"?

(A) "I acknowledge myself to be indebted to B in Rs. 1,000, to be paid on demand, for value received"

(B) "Mr. B, I.O.U Rs. 1,000"

(C) "I promise to pay B or order Rs. 500"

(D) None of the above

இது "பிராமிசரி நோட்டுக்கு" எடுத்துக்காட்டு அல்ல

(A) B க்கு நான் ரூ. 1,000, பெறப்பட்ட மதிப்புக்கு, அவர் கேட்கும்பொழுது செலுத்த வேண்டும்

(B) திரு. B, I.O.U ரூ. 1,000

(C) திரு. B என்பவருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்ற நபருக்கு ரூபாய் 500/- செலுத்த சம்மதிக்கிறேன்

(D) மேலே எதுவும் இல்லை

Teachingninja.in

15. All offences under Chapter XVII shall be tried by:

(A) A Metropolitan Magistrate

(B) A Judicial Magistrate of the first class

(C) Either (A) or (B)

(D) None of the above

அத்தியாயம் XVIIஇன் கீழ் உள்ள அனைத்து குற்றங்களும் இவர்களால் விசாரிக்கப்படும்:

(A) ஒரு பெருநகர மாஜிஸ்திரேட்

(B) முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்திரேட்

(C) (A) அல்லது (B)

(D) மேலே எதுவும் இல்லை

16. A promissory note, bill of exchange or cheque payable to order, is negotiable:

(A) By endorsement and delivery thereof

(B) By the holder by endorsement

(C) By delivery thereof

(D) None of the above

ஒரு பிராமிசரி நோட், மாற்றுச்சீட்டு அல்லது ஆர்டருக்கு செலுத்த வேண்டிய காசோலை, எவ்வாறு மாற்ற முடியும் :

(A) ஒப்புதல் குறிப்பு மற்றும் அதை வழங்குவதன் மூலம்

(B) ஒப்புதல் குறிப்பு மூலம் வைத்திருப்பவரிடம் இருந்து

(C) அதை வழங்குவதன் மூலம்

(D) மேலே எதுவும் இல்லை

17. Which section of the Negotiable Instruments Act defines the words, 'Negotiable Instrument':

(A) Section 15

(B) Section 14

(C) Section 13A

(D) Section 13

நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமென்ட் சட்டத்தின் எந்தப் பிரிவு 'நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமென்ட்' என்ற வார்த்தைகளை வரையறுக்கிறது:

(A) பிரிவு 15

(B) பிரிவு 14

(C) பிரிவு 13A

(D) பிரிவு 13

Teachingninja.in

18. Under which of the following, any provision of the Indian Contract Act, would be void, if inconsistent with the fundamental rights?

(A) Article 11 of the Constitution of India

(B) Article 12 of the Constitution of India

(C) Article 13 of the Constitution of India

(D) Article 14 of the Constitution of India

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ்க்கண்ட பிரிவுகளில் எந்த பிரிவு அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டதாக இருக்கும் இந்திய ஒப்பந்த சட்டத்தின் பிரிவுகளை இல்லாநிலை ஆக்குகிறது

(A) இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் பிரிவு 11

(B) இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் பிரிவு 12

(C) இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் பிரிவு 13

(D) இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் பிரிவு 14

19. Section 69 of the Indian Contract Act, 1872 embodies which of the following doctrines?

(A) Doctrine of frustration

(B) Doctrine of unjust enrichment

(C) Doctrine of implied contract

(D) None of these

இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இன் பிரிவு 69 பின்வரும் எந்தக் கோட்பாடுகளை உள்ளடக்கியது ?

(A) விரக்தியின் கோட்பாடு

(B) நியாயமற்ற செறிவூட்டல் கோட்பாடு

(C) அனுமானிக்கக்கூடிய ஒப்பந்தத்தின் கோட்பாடு

(D) இவை எதுவும் இல்லை

Teachingninja.in

20. A contracts with B to deliver to him 250 kilograms of rice before the 1st of May. A delivers 130 kilograms only before that day and none after. B retains the 130 Kilograms after the 1st of May.

(A) He is not bound to pay A for them

(B) He is bound to pay A for them

(C) He is partially bound to pay A for them

(D) None of these

A மே 1 ஆம் தேதிக்கு முன் Bக்கு 250 கிலோ அரிசியை வழங்குவதற்கு B உடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அன்றைய நாளுக்கு முன்பு A 130 கிலோ கிராம்களை மட்டுமே வழங்குகிறார். அதற்குப் பிறகு அரிசி வழங்கவில்லை. மே 1 ஆம் தேதிக்குப் பிறகு 130 கிலோ கிராம்களை B தன்னிடம் வைத்திருக்கிறார்

(A) அவர் அதற்கான தொகையை Aயிடம் செலுத்த வேண்டியதில்லை

(B) அவர் அதற்கான தொகையை Aயிடம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்

(C) அதற்கான பகுதி தொகையை Aயிடம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்

(D) இவற்றில் எதுவும் இல்லை

21. Controller as defined under Section 2(3) of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, is a?

(A) Civil Court

(B) Revenue Court

(C) Persona Designata

(D) Criminal Court

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாட்டு) சட்டம் பிரிவு 2(3) இன் கீழ் அமர்த்தப்படும் வாடகை கட்டுப்பாட்டு அலுவலர்

(A) ஒரு சிவில் நீதிமன்றம்

(B) ஒரு வருவாய் நீதிமன்றம்

(C) குறிப்பிட்ட நபர்

(D) குற்றவியல் நீதிமன்றம்

Teachingninja.in

22. What is the time limit prescribed for entering into an agreement for tenancies in existence at the time of commencement of the Tamil Nadu Regulation of Rights and Liabilities of Landlords and Tenants Act 2017?

(A) one year
(B) 90 days
(C) 165 days
(D) 575 days

தமிழ்நாடு சொத்துரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் முறைப்படுத்துதல் சட்டம் 2017 அமல்படுத்தப்பட்ட பொழுது அமுலில் இருந்த வாய்மொழியான வாடகை ஒப்பந்தங்களை எழுத்து வடிவில் ஆக மாற்றுவதற்கு எத்தனை நாட்கள் வழங்கப்பட்டுள்ளது?

(A) ஒரு வருடம்
(B) 90 நாட்கள்
(C) 165 நாட்கள்
(D) 575 நாட்கள்

23. A tenancy that has expired and not renewed for a further period and the landlord has not demanded possession is deemed to be extended for a period of

(A) One year
(B) Six years
(C) Six months
(D) 18 months

புதுப்பிக்கப்படாத காலாவதியான வாடகை ஒப்பந்தம் நிலசுவான்தார் சுவாதீனம் கோராத பொழுது எவ்வளவு காலத்திற்கு நீட்டிக்கப்படும்?

(A) ஒரு வருடம்
(B) ஆறு வருடங்கள்
(C) 6 மாதங்கள்
(D) 18 மாதங்கள்

Teachingninja.in

24. The Electoral College for election of President of India consists of

(A) Members of both the houses of Parliament and Legislature Assemblies of the States

(B) Members of the Indian Administration Service

(C) Members of the Central and State Cabinets

(D) Members of the Legislative Councils of the States

இந்திய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் வாக்களிப்போர் யார்?

(A) நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்

(B) இந்திய அரசு பணி உறுப்பினர்கள்

(C) மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள்

(D) சட்ட மேல் சபை உறுப்பினர்கள்

25. A Judge of the High Court may resign by a letter addressed to

(A) Chief Minister of the State

(B) Governor of the State

(C) Chief Justice of India

(D) President of India

உயர் நீதிமன்ற நீதிபதி தனது ராஜினாமா கடிதத்தை யாரிடம் அளிக்க வேண்டும்

(A) மாநில முதலமைச்சர்

(B) மாநில ஆளுநர்

(C) இந்திய தலைமை நீதிபதி

(D) இந்திய ஜனாதிபதி

Teachingninja.in

26. X was accused of a criminal offence by Y and the case pended on for 12 years, during which not a single witness was produced by the prosecution. Which of the following article of the constitution of India, in this case, was violated?

(A) Article 12, Constitution of India

(B) Article 15, Constitution of India

(C) Article 21, Constitution of India

(D) Article 25, Constitution of India

X என்பவர் Y யின் மீது ஒரு குற்ற வழக்கை தொடுத்தார். அந்த வழக்கு சாட்சிகள் விசாரிக்கப்படாமலேயே 12 வருடங்கள் நடந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ்க்கண்ட விதிகளில் எந்த விதி மீறப்பட்டிருக்கிறது

(A) விதி 12

(B) விதி 15

(C) விதி 21

(D) விதி 25

27. Extra territorial offences are mentioned under :

(A) Section 3 of IPC

(B) Section 2 of IPC

(C) Section 4 of IPC

(D) None of the above

இந்திய எல்லைகளுக்கு வெளியே செய்யப்படும் குற்றங்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 3

(B) பிரிவு 2

(C) பிரிவு 4

(D) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

Teachingninja.in

28. Which is wrong in respect of wrongful gain?

(A) Gain of some property

(B) Property to which a person is not legally entitled

(C) Gain by way of unlawful means

(D) None of the above

கீழ்க்கண்டவற்றில் எது தவறான வரவு இல்லை

(A) ஒரு சொத்தின் வரவு

(B) ஒருவருக்கு சட்டப்படியாக உரிமை இல்லாத சொத்து

(C) சட்டப்படி அல்லாத வரவு

(D) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

29. Which statement is not correct in regard to counterfeit?

(A) Who causes one thing to resemble another

(B) To imitate it exactly

(C) Knows that by act deception will be practised

(D) Intend by means of resemblance to practice deception

கீழ்க்கண்டவற்றில் எது ஒரு போலிக்கு ஒவ்வாதது

(A) ஒரு பொருளைப்போல் இன்னொன்றை செய்வது

(B) சற்றும் வித்தியாசம் இல்லாமல் இன்னொன்றை செய்வது

(C) இதனால் ஒருவர் ஏமாற கூடும் என்று தெரிந்து அவ்வாறு செய்வது

(D) இன்னொருவரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் அவ்வாறு செய்வது

Teachingninja.in

30. The purpose of examination of the accused under Sec 313 of Cr.P.C. is:

(A) To personally explain to the accused the circumstances appearing in the evidence against him

(B) To enable accused to know his defence

(C) To make accused aware of charges

(D) All the above

குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 313 ஆம் பிரிவின் கீழ் குற்றவாளியை விசாரிப்பதற்கான நோக்கம்

(A) சாட்சியத்தில் அவருக்கு எதிராக இருக்கும் நிலைகளை அவருக்கு நேரில் விளக்கும் பொருட்டு

(B) குற்றவாளி அவரது மறுப்புரையை தெரிந்து கொள்ளும் பொருட்டு

(C) அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை அவருக்கு தெரிவிக்க

(D) மேற்கண்டவற்றில் எதுவும் இல்லை

31. Generally, a copy of FIR is filed by the Police Officer to the Magistrate to take cognizance in compliance with :

(A) Section 156 of Cr.P.C.

(B) Section 157 of Cr.P.C.

(C) Section 158 of Cr.P.C.

(D) Section 159 of Cr.P.C.

சாதாரணமாக முதல் தகவல் அறிக்கை எந்த பிரிவின் கீழ் காவல் அதிகாரியால் குற்றவியல் நீதிபதியிடம் புலன் கொள்ளுதலுக்காக தாக்கல் செய்யப்படுகிறது?

(A) பிரிவு 156 குநமுச

(B) பிரிவு 157 குநமுச

(C) பிரிவு 158 குநமுச

(D) பிரிவு 159 குநமுச

Teachingninja.in

32. The principle of proving beyond reasonable doubt applies to :

(A) Criminal proceedings only

(B) Civil proceedings only

(C) Evidence law

(D) Both civil and criminal proceedings

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிப்பது என்ற கோட்பாடு

(A) குற்றவியல் வழக்குகளுக்கு மட்டும் பொருந்தும்

(B) உரிமை இயல் வழக்குகளுக்கு மட்டும் பொருந்தும்

(C) சாட்சிய சட்டத்திற்கு மட்டும் பொருந்தும்

(D) குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகள் இரண்டிற்கும் பொருந்தும்

33. Section 68 of Evidence Act sets out the mode of proving?

(A) A Will only

(B) Will and Instruments requiring attestation by 2 witnesses

(C) A negotiable instrument

(D) Unregistered instrument

சாட்சிய சட்டத்தின் 68 வது பிரிவின்படி நிரூபிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எவை?

(A) உயில் மட்டும்

(B) உயில் மற்றும் இரண்டு சாட்சிகள் கையெழுத்திட வேண்டிய ஆவணங்கள்

(C) நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்ட்

(D) பதிவு செய்யப்படாத பத்திரம்

Teachingninja.in

34. In a Parliamentary Democracy real powers of the state are vested in the

(A) President

(B) Prime Minister

(C) Council of Ministers headed by the Prime Minister

(D) Parliament

பாராளுமன்ற ஜனநாயகத்தில் அரசின் உண்மையான அதிகாரம் யாரிடம் உள்ளது?

(A) ஜனாதிபதியிடம்

(B) பிரதம மந்திரியிடம்

(C) பிரதம மந்திரியின் தலைமையில் இருக்கும் மந்திரி சபையிடம்

(D) பாராளுமன்றத்திடம்

35. Five Great epics in Tamil are

(A) Silapathikaram, Manimegalai, Seevaga Sinthamani, Valayapathi, Kundalakesi.

(B) Silapathikaram, Kamba Ramayanam, Thirukkural, Valayapathi, Kundalakesi.

(C) Thirukkural, Manimegalai, Naladiyar, Thiruppavai, Kundalakesi.

(D) Silapathikaram, Panniru Thirumurai, Seevaga Sinthamani, Periapuranam, Kundalakesi.

ஐம்பெரும் காப்பியங்கள் எவை?

(A) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

(B) சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருக்குறள், வளையாபதி, குண்டலகேசி.

(C) திருக்குறள், மணிமேகலை, நாலடியார், திருப்பாவை, குண்டலகேசி.

(D) சிலப்பதிகாரம், பன்னிரு திருமுறை, சீவக சிந்தாமணி, பெரியபுராணம், குண்டலகேசி.

Teachingninja.in

36. Retention of records provided by law can be done

(A) by preserving the documents in a physical form

(B) by preserving the documents in a electronic form

(C) by printing the documents in high quality paper

(D) by recording the contents on a voice recorder

சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணத்தை

(A) அது இருக்கும்படியே பாதுகாக்கலாம்

(B) மின் பொருள் வடிவமாக பாதுகாக்கலாம்

(C) உயர்ந்த காகிதத்தில் அச்சடித்து பாதுகாக்கலாம்

(D) ஒலி நாடாவில் பதிவு செய்து பாதுகாக்கலாம்

37. Power to prescribe rules in respect of Electronic signatures is vested in the

(A) State Government

(B) Central Government

(C) Electronic Corporation of India

(D) President of India

மின் பொருள் கையெழுத்துக்களை வரையறுக்கும் விதிகளை இயற்றும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

(A) மாநில அரசாங்கம்

(B) மத்திய அரசாங்கம்

(C) இந்திய மின் பொருள் மையம்

(D) இந்திய ஜனாதிபதி

Teachingninja.in

38. Attachment made under the Criminal Law Amendment Ordinance 1944 is normally valid for a period of:

(A) 3 years

(B) 90 days

(C) 1 year

(D) None of the above

1944 ஆம் வருடத்திய குற்றவியல் சட்ட திருத்த மசோதாவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட பற்றுகை சாதாரணமாக எவ்வளவு நாட்களுக்கு அமுலில் இருக்கும்?

(A) 3 வருடங்கள்

(B) 90 நாட்கள்

(C) ஒரு வருடம்

(D) மேற்கண்டவற்றில் எதுவும் இல்லை

39. A sexual assault committed on a child becomes an aggravated sexual assault if it is committed by:

(A) Police Officer in course of his duties

(B) Another Child

(C) Brother or Sister of the child

(D) None of the above

கீழ்கண்டவர்களில் யாரால் செய்யப்படும்போது ஒரு குழந்தையின் மீது நடத்தப்படும் பாலியல் தாக்குதல் தீவிர பாலியல் தாக்குதல் ஆகுகிறது?

(A) அலுவலில் இருக்கும் காவல் அலுவலர்

(B) மற்றொரு குழந்தை

(C) அந்த குழந்தையின் சகோதரர் அல்லது சகோதரி

(D) மேற்கண்டவரில் எவரும் இல்லை

Teachingninja.in

40. The following provisions of the protection of children from sexual offences Act 2012 imposes an obligation on certain persons to report suspected offences against children?

(A) Section 22
(B) Section 20
(C) Section 30
(D) Section 21

2012 ஆம் வருடத்திய பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டத்தின் கீழ்க்கண்ட பிரிவுகளில் எந்த பிரிவு குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டிய கடமையை ஏற்படுத்துகிறது

(A) பிரிவு 22
(B) பிரிவு 20
(C) பிரிவு 30
(D) பிரிவு 21

41. Shared household under the provisions of the protection of women from domestic violence Act 2005 includes :

(A) The house belonging to the woman
(B) The house belonging to the husband of the woman
(C) Belonging to the joint family of which the husband is a member
(D) All the above

2005 ஆம் வருடத்திய மனைசார் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை காக்கும் சட்டத்தின் கீழ் பங்கீடு செய்து கொள்ளப்பட்ட வீடு என்பது கீழ்க்கண்டவற்றில் எதை உள்ளடக்கியது.

(A) பெண்ணிற்கு உரிமையான வீடு
(B) பெண்ணின் கணவனுக்கு உரிமையான வீடு
(C) கணவன் உறுப்பினராக உள்ள கூட்டு குடும்பத்திற்கு சொந்தமான வீடு
(D) மேற்கண்ட மூன்றும்

Teachingninja.in

42. Anand was born 2 years after his father's marriage; his mother is 5 years younger than his father, but 20 years older than Anand, who is 10 years old; at what age did his father got married;

(A) 23 years

(B) 24 years

(C) 25 years

(D) 28 years

ஆனந்த் அவரது தந்தையாருக்கு திருமணம் ஆகி இரண்டு வருடங்கள் கழித்து பிறந்தார், அவரது தாயார் தந்தையாரை விட ஐந்து வயது இளையவர் ஆனால் ஆனந்தை விட 20 வயது மூத்தவர். ஆனந்திற்கு வயது 10. ஆனந்தின் தந்தையாருக்கு திருமணம் ஆகும் போது அவருக்கு என்ன வயது?

(A) 23 வயது

(B) 24 வயது

(C) 25 வயது

(D) 28 வயது

43. Prem ate 100 apples in five days, each day eating 6 more than the previous day. How many apples did he eat on the first day?

(A) 8 (B) 7

(C) 6 (D) 5

பிரேம் ஐந்து நாட்களில் 100 ஆப்பிள்கள் சாப்பிட்டார். ஒவ்வொரு நாளும் அதற்கு முந்தின நாளில் சாப்பிட்ட ஆப்பிள்களின் எண்ணிக்கையை விட ஆறு ஆப்பிள்கள் அதிகமாக சாப்பிட்டார். முதல் நாள் அன்று பிரேம் எத்தனை ஆப்பிள்கள் சாப்பிட்டிருப்பார்?

(A) 8 (B) 7

(C) 6 (D) 5

Teachingninja.in

44. Who can be the Chairperson of the National Human Rights Commission?

(A) Who has been a Chief Justice of India or a Judge of the Supreme Court

(B) Who has been a Chief Justice of a High Court

(C) Who has been a Judge of a High Court

(D) Who has been an Attorney General of India

தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுவதற்கான தகுதி என்ன?

(A) இந்திய தலைமை நீதிபதியாகவோ அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியாகவோ இருந்திருக்க வேண்டும்

(B) ஓர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்திருக்க வேண்டும்

(C) உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்திருக்க வேண்டும்

(D) இந்திய அரசின் தலைமை வழக்கறிஞராக இருந்திருக்க வேண்டும்

45. Assaulting or obstructing public servant when suppressing riot, etc. is dealt under :

(A) Section 150 of IPC

(B) Section 151 of IPC

(C) Section 152 of IPC

(D) Section 153 of IPC

கலவரத்தை கட்டுப்படுத்தும் பணியில் உள்ள ஒரு அரசு பணியாளரை தாக்குவது அல்லது தடுப்பது இந்திய தண்டனை சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் குற்றம் என விளம்பப்பட்டுள்ளது?

(A) பிரிவு 150

(B) பிரிவு 151

(C) பிரிவு 152

(D) பிரிவு 153

Teachingninja.in

46. ———— permits joint trial of several persons.

(A) Section 221 of Cr.P.C.

(B) Section 222 of Cr.P.C.

(C) Section 223 of Cr.P.C.

(D) Section 224 of Cr.P.C.

குற்றவியல் நடைமுறை சட்டத்தின் எந்த பிரிவு பல குற்றவாளிகளை ஒன்றாக இணைத்து விசாரணை செய்திட வழி வகுக்கிறது?

(A) பிரிவு 221

(B) பிரிவு 222

(C) பிரிவு 223

(D) பிரிவு 224

47. As per Section 108 of the Indian Evidence Act, a person is presumed to be dead, if he is not traceable for ———— years;

(A) 5 years

(B) 6 years

(C) 7 years

(D) 10 years

இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 108 இன் கீழ் ஒருவர் ———— ஆண்டுகளுக்கு மேல் காணாமல் போயிருந்தால் அவர் இறந்ததாக கருதப்படுவார்.

(A) 5 ஆண்டுகள்

(B) 6 ஆண்டுகள்

(C) 7 ஆண்டுகள்

(D) 10 ஆண்டுகள்

Teachingninja.in

48. Code of Civil Procedure does not extend to?

(A) Whole of India

(B) State of Nagaland & Tribal Areas

(C) Jammu & Kashmir

(D) Ladakh

சிவில் நடைமுறைச் சட்டம் நீட்டிக்கப்படாத பகுதிகள் எவை?

(A) இந்தியா முழுவதும்

(B) நாகாலாந்து மாநிலம் மற்றும் பழங்குடியினர் பகுதிகள்

(C) ஜம்மு & காஷ்மீர்

(D) லடாக்

49. Decree includes?

(A) An order of dismissal for default

(B) All appealable orders

(C) An order rejecting plaint

(D) An order returning the plaint

தீர்ப்பாணையில் எது அடங்கும்?

(A) தவறுகையினால் ஏற்படும் தள்ளுபடி

(B) மேல்முறையீடு செய்யக்கூடிய அனைத்து உத்தரவுகளும்

(C) பிராதை நிராகரிக்கும் உத்தரவு

(D) பிராதை திருப்புவதற்கான உத்தரவு

Teachingninja.in

50. Maximum rate of interest allowable in ordinary suits post decree is?

(A) Twelve percent

(B) Nine percent

(C) Six percent

(D) Fifteen percent

சாதாரண வழக்குகளில் தீர்ப்புக்குப் பின்னர் அனுமதிக்கப்படும் அதிகபட்ச வட்டி விகிதம் என்ன?

(A) பன்னிரண்டு சதவீதம்

(B) ஒன்பது சதவீதம்

(C) ஆறு சதவீதம்

(D) பதினைந்து சதவீதம்

51. Which of the following are exempt from attachment?

(A) Tools of Artisans

(B) Cheques

(C) Movable Property

(D) None of the above

பின்வருவனவற்றில் பற்றுகையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டவை எவை?

(A) கைவினைஞர்களின் கருவிகள்

(B) காசோலைகள்

(C) அசையும் சொத்து

(D) மேலே எதுவும் இல்லை

Teachingninja.in

52. What could a Court Subordinate to High Court do when it is of the opinion that an Act or Ordinance or Regulation is unconstitutional?

(A) Declare it void

(B) Refer the question to the High Court

(C) Leave the question open

(D) None of the above

